**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.480/2014**

**தேதி : 18.11.2025**

**(வா.சா.1 ) – திரு . சக்திவேல்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (2 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. நான் படிக்கவில்லை. அறிவொளி இயக்கத்தின் மூலமாக கையெழுத்துப் போடவும், படிக்கவும் கற்றுக்கொண்டேன். நான் தமிழில் கையொப்பம் செய்வேன். நான் அ.இ.அ.தி.மு.க. கட்சியில் உறுப்பினராக இருக்கிறேன். கிளைக் கழகச் செயலாளராகவும் இருக்கிறேன். பாலசமுத்திரம் பேரூராட்சியில் நான் பேரூராட்சி துணைத்தலைவராக இருந்துள்ளேன். நான் பேரூராட்சியில் துணைத்தலைவராக இருந்துள்ளதால் எனக்கு சட்டப்படியான நடவடிக்கைகள் பற்றி தெரியும் என்றால் ஒருவர் சொன்னால் அதை கேட்டுக்கொள்ளும் அளவு எனக்கு விபரம் தெரியும். நான் இந்த வழக்கில் வாதியான என் மனைவி பிரேமாவின் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்றால் சரிதான்.

2. 1,2 பிரதிவாதிகள் நிலத்திற்குத் தென்புறம் எனக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி எனக்கு உறவினர் அல்ல. நானும், 5ம் பிரதிவாதியும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. 5ம் பிரதிவாதி எதன் அடிப்படையில் எனக்கு பொது அதிகாரம் கொடுத்தார் என்று கேட்டால் 5ம் பிரதிவாதி வீரவேணியிடம் பொது அதிகாரம் கொடுத்த அன்றே வேறு ஒரு சொத்தையும் நான் கிரையம் பெற்றுள்ளேன். அந்த அடிப்படையில் அவர் எனக்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார். ஒரு சொத்தை வில்லங்கம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு வாங்குவதுதான் சரியானது என்றால் சரிதான்.

3. எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பே 1,2 பிரதிவாதிகளுக்கு தாவாச்சொத்தை கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் அவர்கள் 5ம் பிரதிவாதியின் பாகத்தை வாங்கவில்லை என்பது எனக்கு தெரியும். 5ம் பிரதிவாதியின் பாகத்தை 1,2 பிரதிவாதிகள் வாங்கவில்லை என்பது தெரிந்து அதனால் நான் பொது அதிகாரம் வாங்கினேனா என்றால் 5ம் பிரதிவாதி

சொத்தை விற்குமாறு என்னை கேட்டுக்கொண்டதால் நான் பொது அதிகாரம் வாங்கினேன். 1,2 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், தெரிந்தே சொத்தை அபகரிப்பதற்காகப் பொது அதிகார ஆவணம் பெற்று பொய்யாகச் சாட்சியம் அளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

4. 5ம் பிரதிவாதியின் பாதுகாவலரான அவரது தாயாரான 3ம் பிரதிவாதி, 1,2 பிரதிவாதிகளுக்கு 5ம் பிரதிவாதியின் பாகத்தையும் சேர்த்து கிரையம் கொடுத்தது பற்றி 5ம் பிரதிவாதியிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேனா என்றால் 5ம் பிரதிவாதி உரிமை வயதை அடைந்தபிறகு சம்மதப்பத்திரம் வாங்கிக்கொள்வதாக பேசியிருந்து, அதன்படி தொகை எதுவும் கொடுக்காததால் பொது அதிகாரம் கொடுப்பதாக 5ம் பிரதிவாதியின் தாயார் என்னிடம் கூறினார். நான் சொல்வது பொய் என்றும், 3ம் பிரதிவாதி அவ்வாறு தெரிவிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் 11.05.2010 அன்று ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் 08.02.2006ல் இரண்டு கிரையப்பத்திரங்கள் மூலம் அவர்களது பெயரில் தனித்தனியாக கிரைய ஆவணங்கள் வாங்கினார்கள் என்றால் 3ல் 2 பங்கு நிலத்தை அவர்கள் கிரையம் வாங்கியது எனக்கு தெரியும். அவர்கள் முழுச்சொத்தையும் கிரையம் வாங்கினார்கள் என்றும், வழக்கிற்காக பொய்யாக 3ல் 2 பங்கு நிலம் கிரையம் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. 1,2 பிரதிவாதிகள் கிரையம் பெற்று 4 ஆண்டுகள் கழித்து நான் பொது அதிகாரம் பெற்றதாகச் சொன்னால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் என்னுடைய நிலத்திற்கு வடபுறம் இருந்ததால் அவர்கள் அனுபவித்து வந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் பெயர் நாகப்பன். 5ம் பிரதிவாதி வீரவேணி என்னுடைய மனைவி அல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2வது பத்தியில் வீரமணி அவருடைய கணவருக்கு பொது அதிகாரம் கொடுப்பதாக வாசகங்கள் உள்ளது என்றால் தட்டச்சுப் பிழையாக மேற்படி விபரம் இடம் பெற்றுள்ளது. நானும், வீரவேணியின் கணவர் வி.சக்திவேலும் சேர்ந்து வீரவேணியை ஏமாற்றி வா.சா.ஆ.2 பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் சொன்னால் சரியல்ல. தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

6. பொது அதிகார ஆவணத்தில் நான்குமால் பற்றி குறிப்பிடவில்லை

என்றால் ஆவணத்தைப் பார்த்தால்தான் தெரியும். பொது அதிகார ஆவணத்தில் முதலாவது சாட்சியாக வீரவேணியின் கணவர் வி.சக்திவேல் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். இரண்டாவது சாட்சியாக எனது சகோதரர் நாகப்பன் மகன் முருகேசன் என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். பொது அதிகார ஆவணம் மோசடியாக ஏற்படுத்தியதால் ஆவண எழுத்தர் யாரும் எழுத முன்வரவில்லை என்றும், நானும், வி.சக்திவேலும் வீரவேணியை மிரட்டி அவரை ஆவண எழுத்தராக காட்டி ஆவணம் தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், என்னுடைய வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

7. நான் 2017ம் வருடம் மேற்படி பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் என்னுடைய மனைவியின் சகோதரியான ராகினி என்பவருக்கு கிரையம் கொடுத்ததாகச் சொன்னால் சரிதான். மோசடியாக ஏற்படுத்தப்பட்ட பொது அதிகார ஆவணத்தை ஊர்ஜிதம் செய்வதற்காக அவ்வாறான கிரைய ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் சொன்னால் சரியல்ல. என்னுடைய மனைவியின் சகோதரிக்கு கிரையம் கொடுத்த சமயம் சொத்துக்களின் பட்டா, சிட்டா 1,2 பிரதிவாதிகளின் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல, மூவர் பெயரிலும் பட்டா இருந்தது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் 1,2 பிரதிவாதிகளின் பெயர் உள்ளது என்றால் சரிதான்.

8. என் மீதும், ராகினி மீதும் மாவட்ட குற்றப்பிரிவில் 1,2 பிரதிவாதிகள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான், நாங்களும் புகார் கொடுத்தோம். உண்மையில் அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. மாவட்ட குற்றப்பிரிவில் குற்ற எண்.6/2015 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இவ்வாறான வழக்கை தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. குற்ற வழக்கை ரத்துச் செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரிதான். மேற்படி மனு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதாகச் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. திண்டுக்கல் குற்றவியல் நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் சி.சி.499/2023 என்ற வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளதாகச் சொன்னால் சரிதான். 1,2

பிரதிவாதிகள் தாவாச்சொத்தில் விவசாயம் செய்ததை இடைஞ்சல் செய்ததாக என் மீதும் நாகராஜ் மற்றும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத சிலர் மீதும் பழனி தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண்.1156/2015 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

10. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.10 செல் ரசீது நான் கொடுத்தது அல்ல என 5ம் பிரதிவாதி மாவட்டக் குற்றப்பிரிவில் புகார் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் மீது புகார் கொடுத்து மாவட்டக் குற்றப்பிரிவில் குற்ற எண்.72/2015 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.10 செல் ரசீதில் யார், யாருக்கு ரசீது கொடுக்கிறார்கள் என்ற விபரம் இல்லை என்றும், அதிலிருந்தே மேற்படி ஆவணம் மோசடியானது எனத் தெரியவருவதாகவும் சொன்னால் சரியல்ல. நான் மோசடியாக என்னுடைய மனைவியின் சகோதரி ராகினிக்கு கிரையம் கொடுத்த விபரம் தெரிந்து 5ம் பிரதிவாதி பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் என் வழக்கறிஞர் அது பற்றி சொன்னார்.

11. மேற்படி பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்தபிறகுதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல, வழக்கு முன்பே தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. வீரவேணியின் கணவர் வி.சக்திவேல் என்பவருக்கு எனக்கு பொது அதிகாரம் கொடுக்கப்பட்ட விபரம் நன்கு தெரியும் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுக்கும்போதும் வீரவேணியின் கணவர் வி.சக்திவேல் சாட்சியாக கையொப்பம் செய்ததாகச் சொன்னால் எனக்கு தெரியாது. உண்மையிலேயே வி.சக்திவேலுக்கு மேற்படி விபரங்கள் நன்கு தெரியும் என்றும், பொது அதிகார ஆவணத்தை வீரவேணியை மிரட்டி வாங்கியதாகவும் சொன்னால் சரியல்ல.

12. 1,2 பிரதிவாதிகள் வயதானவர்கள் என்றும், இவ்வாறு ஆவணங்கள் உற்பத்தி செய்து மிரட்டினால் அவர்கள் பயந்து சொத்துக்களை கிரையம் கொடுப்பார்கள் என்பதற்காக ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே 3ல் 1 பாகம் வீரவேணிக்கு பாத்தியப்பட்டிருந்தால் பாக வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றும், 3ம் பிரதிவாதி வீரவேணியின் சார்பில் கிரையம் கொடுத்ததை வீரவேணி ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் சொன்னால் அது பற்றி

எனக்கு தெரியாது. வீரவேணிக்காக 3ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களைப் பற்றி கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.

13. என்னுடைய மனைவியின் சகோதரி ராகினி நான் கிரையம் கொடுக்கும்போது ராகினி திருமணமாகாமல் இருந்தார் என்றால் ராகினிக்கு தற்போதுவரை திருமணம் ஆகவில்லை. ராகினிக்கு 23.09.2013 அன்று கிரையம் கொடுத்ததாகச் சொன்னால் சரிதான். ராகினிக்கு நான் கிரையம் கொடுத்த நான்கே மாதத்தில் என் மனைவிக்கு ராகினி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். என் மனைவி பிரேமாவுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான்குமால் குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னால் அவ்வாறு இருந்தால்தான் ஆவணம் பதிய முடியும் என்று சொன்னார்கள். பொது அதிகார ஆவணத்தில் நான்குமால் ஏன் குறிப்பிடவில்லை என்று கேட்டால் அந்த விபரம் 5ம் பிரதிவாதிக்குத்தான் தெரியும்.

14. நான் ராகினிக்கு கிரையம் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் நான்குமால் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகளின் எதிர்வாதம் என்னவென்று நான் படித்துத் தெரிந்துகொண்டேனா என்றால் என் வழக்கறிஞருக்குத்தான் அந்த விபரம் தெரியும். 2014 காலக்கட்டத்தில் நான் பேரூராட்சித் துணைத்தலைவராக இருந்ததால் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி என்னுடைய மனைவி பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்த்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் 2007 முதல் 2015 வரை வரி செலுத்தியுள்ளதாகச் சொன்னால் சரிதான். நாங்களும் வரி செலுத்தியுள்ளோம்.

15. பிரதிவாதிகள் கோரியுள்ள எதிர்கோருரிமை பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் என்னுடைய மனைவியின் சகோதரி ராகினிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் மற்றும் ராகினி என் மனைவி பிரேமாவுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் ஆகியவை செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை நாங்கள் எந்தக்காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றும், தாவாச்சொத்துக்கள் முழுவதும் 1,2 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டது என்றும், அதனால் அது பற்றி கேள்விகள் கேட்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**(3,4,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.11.18 20:03:09 +0530

Additional Sub Judge,
Palani.